# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 15 ஆம் ஞாயிறு | 13 ஜூலை 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

### சூழலியல் பணித்துவம்

### வளங்கள் களவாடப்படுவதையும் சுரண்டப்படுவதையும் தடுத்திட அழைப்பு

# எனக்கு அடுத்திருப்பவர் யார்?

ஒரு கொள்ளையினால் பாதிக்கப்பட்டவரோ அல்லது விபத்தில் காயமடைந்தவரோ, ‘ஒரு நல்ல சமாரியனைப் போல’ தமக்கு யார் உதவிசெய்வார் என்று தேர்வு செய்யமுடியாது. முன்பின் அறிமுகமில்லாதவரோ, நண்பர் அல்லது ஒருகாலத்தில் தாம் அவமதித்த ஒருவராகவோ கூட இருக்கலாம். அவர் யார் என்பதை பாதிக்கப்பட்டவர் முடிவு செய்யமுடியாது. மாறாக அந்தவழியாக செல்பவர்தான், உதவி செய்யலாமா அல்லது விலகிச்செல்லாமா என்பதை முடிவு செய்பவர்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கிறிஸ்துவை படைப்பு அனைத்திலும் தலைப்பேறு அவர் (கொலோ:1:15) அனைத்தும் அவர் வழியாக அவருக்காகப் படைக்கப்பட்டன. அனைத்தும் அவரோடிணைந்து நிலைபெறுகின்றன என கூறுகிறார் நற்செய்தியில் இயேசு நல்ல சமாரியன் உவமையைச் சொல்கிறார். பாவத்தால் காயமடைந்து, கடவுளிடமிருந்து விலகியவர்கள் வீழ்ந்த மனிதகுலத்தை நெருங்குபவர் என்று தன்னைச் சித்தரிக்கிறார். இயேசு குணப்படுத்துவதற்கு மட்டுமல்ல; தந்தையோடு இருந்த ஒன்றிப்பை மீட்டெடுக்கவும் வருகிறார். உவமையின் முடிவில் இயேசு “நீரும் போய் அவ்வாறே செய்யும்” என்று இந்த வார்த்தைகளைச் சொல்லி நமக்கும் ஒரு சவாலை முன்வைக்கிறார். (லூக்கா 10:37) இவை சமூகம், கலாச்சாரம் அல்லது சமய எல்லைகளை மீறி சங்கடமாக, கடினமானதாக, அல்லது விலை உயர்ந்ததாகவே இருந்தாலும் கூட உறுதியான நடவடிக்கை எடுக்க கோருகிறது.



இன்று அடுத்திருப்பவரின் அன்பான அழைப்பு, மனித தொடர்புகளுக்கு அப்பால் நமது பொதுஇல்லமான பூமியைப் பராமரிப்பதையும் உள்ளடக்க வேண்டும். சுற்றுச்சூழல் நெருக்கடி, நமது காலத்தின் மிகப்பெரிய தார்மீக மற்றும் ஆன்மீக சவால்களில் ஒன்றை முன்வைக்கிறது. இந்தப் பார்வையில், இந்த உவமை, புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவத்தைப் பெறுகிறது. காட்டை அழித்தல், மாசடைந்த ஆறுகள், உருகும் பனிப்பாறைகள் மற்றும் குறிப்பாக அதிகரித்துவரும் தூய்மையான நீர் பற்றாக்குறை, ஆகியவற்றால் கூக்குரலிடும் சாலையோரத்தில் கிடக்கும் காயமடைந்த பாதிக்கப்பட்டவரோடு இந்தப் பூமியை ஒப்பிடலாம்.

இந்த உவமையில் வரும் குரு மற்றும் லேவியரின் அலட்சியம் சுற்றுச்சூழல் குறித்து, மெத்தனமாக அல்லது அறியாமல் இருக்கும் சமூகத்தின் பலதுறைகளின் அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. இதற்கிடையில் நவீன கால ‘நல்ல சமாரியர்களில்’ சுற்றுச்சூழல் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பழங்குடி சமூகங்கள் விஞ்ஞானிகள் மற்றும் நிலையான நடைமுறைகள், மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்காக அயராது போராடும் தன்னார்வலர்கள் அடங்குவர்.

தண்ணீர் கடவுள் தரும் ஒரு அடிப்படைப் பரிசாகவும் வாழ்க்கையின் அடையாளமாகவும் விவிலியத்தில் காணப்படுகிறது. (எசாயா 55:1, யோவான் 4:14) தண்ணீர் அதிகரித்துவரும் ஆபத்தில் உள்ளது. நகர்ப்புறங்களில், தண்ணீர் வீணாக்கப்படுவது ஒரு குறிப்பிடத்தக்க கவலையாகும் தண்ணீரின் பயன்பாட்டைப் பற்றி நாம் கவனமாக இருக்கிறோமா? பாதுகாப்பை நடைமுறைப்படுத்துகிறோமா? தண்ணீர் கசிவுகளைச் சரிசெய்தல், மழைநீர் சேகரிப்பு அல்லது தண்ணீரைப் பாதுகாக்கும் திறன் கொண்ட சாதனங்களைப் பயன்படுத்துதல் போன்ற எளிய செயல்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்.

‘நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்’ என்ற திருச்சட்ட அறிஞரின் கேள்வி இன்னும் விரிவாக்கப்படவேண்டும். “எதிர்கால சந்ததியினருக்கு வாழ்க்கையை நிலைநிறுத்த நான் என்ன செய்யவேண்டும்?” இப்போது நம் அடுத்திருப்பவரை அன்பு செய்வது என்பது அனைவரின் நன்மைக்காகவும், நமது பொது இல்லமான பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பையும் உள்ளடக்கியது.

> நல்வாய்ப்பாக நமது பூமிகோளின் பகுதியை நாம் ஆராய்ந்தால், மனிதகுலம் கடவுளின் எதிர்ப்பார்ப்பை ஏமாற்றிவிட்டதை உடனடியாக நாம் காணலாம்
>
> – புனித 2 ஆம் ஜோன்போல்

**இன்றைய இறைவார்த்தை:**

இணைச்சட்டம்: 30: 10-14

திருப்பாடல்: 69: 14-17, 30-31, 33-34, 36-37 (அ) 18: 8-11

கொலோசையர்: 1: 15-20

லூக்கா 10: 25-37

INTERNAL CIRCULATION ONLY
BUL 28/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org